

# இச்சைக்கு ஒரு ஒ போடு



LS MORGAN

# காதல் இச்சைக்கு ஒரு ஓ போடு

எல்.எஸ். மோர்கன்

# Table of Contents

Copertina
காதல் இச்சைக்கு ஒரு ஓ போடு
© LS Morgan 2023
மோர்கன். எல். எஸ்.
___
___
__
இச்சை
அவா மெண்டெஸ் காலையில் எழுந்தவுடன், இன்றைய நாள் எத்தகைய சிக்கலானது மற்றும் தான் இன்று வழக்கத்திற்கு மாறான சூழ்நிலையைச் சந்திக்கப்போவது குறித்து எதிர்பார்க்கவில்லை.
ஆக்ஸல் பர்ன்ஸ்க்கு
கார்டியனின் உடைகள் வந்தது
ஆக்ஸல் அப்போது தான் அந்த மீட்டிங்கை முடித்தார், அவரது உதவியாளர் ஒரு அஞ்சல் உறையை எடுத்துக்கொண்டு வந்தார். பர்ன்ஸ், உணவு விடுதிக்குச் செல்ல வசதியாக டிரைவரிடம் காரை தயார் செய்யச் சொல்லவா என்று கேட்டார்?
செட் அமைக்கப்பட்டிருந்த
கேமரா பிடித்த படங்களை ஒன்றின் பின் ஒன்றாக அழித்துக் கொண்டிருந்தாள் அவா. வெளியே உணவருந்த போனவர்கள், ஒருவர் பின் ஒருவராக வர ஆரம்பித்தார்கள். கொஞ்ச நேரத்தில் அந்த செட் ஆட்களால் நிரம்பி வழிந்தது.
போட்டோ ஷூட் முடிந்தவுடன்
அது கனவில் வருவதைப்போல ஒரு பிரமாண்டமான மாளிகை, என அந்த இடத்தில் காரை விட்டு இறங்கியவுடன் அவா நினைத்தாள்.

ஆக்ஸல் அந்த அறைக்கு உள்ளே வந்தபோது அவா ஒரு துண்டை மற்றும் தனது உடலில் சுற்றி இருந்தாள். அவர் அந்த பணி

ஓ, இந்த டிசைனில் தான் நீங்கள் ஆடையை வடிவமைக்கப் போகிறீர்களா?

இந்த பார்ட்டிக்கு இப்படி ஒரு அழகியை எப்படி உடன் அழைத்து வர என்னால் முடிந்தது என்ற வியப்பில், எல்லோரும் உன்னைத் தான் பார்க்கிறார்கள்.

நீ அந்த சோபாவில் படுத்துக்கொண்டு, டோரிடோஸ் சாப்பிட்டுக் கொண்டு, ஆயிரமாவது முறையாக "50 முதல் டேட்கள்" திரைப்படத்தைப் பார்க்க நான் உன்னை அனுமதிக்கப் போவதில்லை, புரிகிறதா?

நீ எங்கே போகிறாய்?

நூல் ஆசிரியர் அறிமுகம்

© LS Morgan 2023

காப்புரிமை @2023 எல். எஸ். மோர்கன்

அட்டை வடிவம்: டானி மோரேனோ - designer.danimoreno@gmail.com

மாற்றங்கள்: பெல் கோஸ் - Isabel.goes@gmail.com

டிஜிட்டல் வடிவம்: ஓடில் சில்வா டயஸ்

தமிழ் மொழிபெயர்ப்பாளர் – சார்லி

இது ஒரு கற்பனை கதை. இதன் நோக்கம் மக்களின் பொழுதுபோக்கு. சித்தரிக்கப்பட்டுள்ள பெயர்கள், பாத்திரங்கள், இடங்கள் மற்றும் நிகழ்வுகள், கதாசிரியரின் கற்பனை. அவை யாரையும் குறிப்பிடவில்லை.

இதன் விவரிப்புகளுக்கிடையே ஏதாவது ஒற்றுமைகள் இருந்தால் அவை தற்செயல் நிகழ்வுகள் மட்டுமே.

இது பேச்சுவழக்கில் எழுதப்பட்டிருக்கும் நவீன உரையாகும் மற்றும் பேச்சு வழக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இருப்பினும், சில இடங்களில் இது கலாச்சார விதிமுறைகளை மீறினாலும், அது இப்போதும் அன்றாட வாழ்க்கையில் மக்களால் பயன்படுத்தப்படும் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. மேலும் அது பேச்சு மற்றும் எழுத்து வழக்குகளை இணைப்பதினால் இந்த புத்தகத்தைச் சுலபமாகப் படிக்கலாம்.

இந்த புத்தகத்தின் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்பிற்கு மேலே குறிப்பிடப்பட்ட மொழிபெயர்ப்பாளரே முழுவதும் பொறுப்பானவர் மேலும் அவரது தவறுகள்

மற்றும் தவறான விளக்கங்களுக்கு 100% கதாசிரியர் பொறுப்பல்ல. மொழிபெயர்ப்பாளர், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட போர்த்துகீசிய மொழியில் எழுதப்பட்ட அசல் புத்தகத்தைத் தமிழ் மொழியில், அதன் உள்ளடக்கத்தை மாற்றாமல் அல்லது மேலே கதாசிரியர் விவரித்தபடி மொழிபெயர்க்க முயற்சித்தார்.

---

மோர்கன். எல். எஸ்.
எனது பெருமிதம் உனது மகிழ்ச்சி – முதல் பதிப்பு,
சுயமாகப் பிரசுரிக்கப்பட்டது – 2023/

1. கதை
2. பிரேசிலிய இலக்கியம்
3. உணர்ச்சிகரமான காதல் கதை

# அட்டைப்படம்

அட்டைப்படம் - கேன்வாஸ் கோன்செச்ஸ்ஷன் இடமிருந்து உரிமை பெறப்பட்டது

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டது

ஆசிரியரின் எழுத்து பூர்வ அனுமதியின்றி, எந்த வகையிலும் – கண்ணுக்குப் புலப்படும் அல்லது புலப்படாத - இந்த படைப்பின் எந்தப் பகுதியையும் சேமித்து வைப்பது மற்றும்/அல்லது மீள் உருவாக்கம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த சட்ட உரிமைகளின் அத்துமீறல், பிரேசில் நாட்டுச் சட்ட குறியீடு 9.610/98 -இன் படி குற்றச் செயல் மற்றும் பிரேசில் நாட்டுக் குற்றவியல் குறியீடு 184 ஆம் பிரிவின்படி தண்டனைக்குரியது.

# இச்சை



### காதல் இச்சைக்கு ஒரு ஓ போடு

முன்னுரை: அவா மெண்டெஸ் காலையில் எழுந்தவுடன், இன்றைய நாள் எப்போதும் போலத் தான் இருக்கப் போகிறது என்று நினைத்தாள், ஆனால் அன்று நடந்த இரகசிய படப்பிடிப்பில் புகைப்படம் எடுக்கப்பட்ட அந்த வசீகரமான நபரை, அவள் எதிர்பார்க்கவில்லை. அந்த மனிதரின் கண்ணில் தெரிந்த அவரது எதிர்பார்ப்பு அவள் தான் என்பதையும் அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

- “பாவ” கதைகள் வரிசையில் ஒரு காமக் கதை–



**அவா மெண்டெஸ் காலையில் எழுந்தவுடன்**, இன்றைய நாள் எத்தகைய சிக்கலானது மற்றும் தான் இன்று வழக்கத்திற்கு மாறான சூழ்நிலையைச் சந்திக்கப்போவது குறித்து எதிர்பார்க்கவில்லை.

காலை உணவை முடித்தவுடன், தனது செல்ல பறவை சன்ஷைனுக்கு உணவு மற்றும் தண்ணீர் வைத்துவிட்டு, தனது பேக்பேக் மற்றும் பெரிய மேக்அப் பெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பினாள். சப்வேயை நோக்கி நீண்ட தூரம் நடந்தாள். கை கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தாள், புகைப்படங்கள் எடுக்க வேண்டிய கட்டிடத்தை அடைய நிறைய நேரம் இருப்பதை உணர்ந்தாள்.

“நீ தாமதமாக வந்திருக்கிறாய்!’

தான் தாமதமாக வரவில்லை என நிச்சயமாக அவளுக்குத் தெரியும், இருப்பினும், தனது பாஸிடம் காரணம் ஏதும் அவள் சொல்ல விரும்பவில்லை.

“நீ செய்யும் வேலைகளை இவ்வளவு நன்றாகச் செய்யவில்லை என்றால், உன்னை எப்போதே வேலையில் இருந்து நீக்கி, வீட்டிற்கு அனுப்பி இருப்பேன்.” அவள் அவரை ஆழமாக முறைத்துப் பார்த்துக்கொண்டே விலகிச் சென்றாள். “காலதாமதம் செய்த நேரத்தில் கொஞ்சம் நல்ல உடையை உடுத்தி அழகாக வந்திருக்கலாம்”.

மன்னிக்கவும் திருமதி ஹிக்ஸ், அவள் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியமில்லை, ஆனாலும், அவள்

எனக்கு முன்னரே வந்திருக்க வேண்டும். இருப்பினும், தொழில்ரீதியாக அவள் அவ்வாறு செய்வது அவசியம்.

அதை விடுங்கள். உங்கள் பொருட்களை அந்த கண்ணாடி மேசை மேல் தயார் செய்யுங்கள். மாடல் அழகிகள் இங்கே வரும்போது அனைத்தும் தயார்நிலையில் இருக்க வேண்டும். இன்று நாள் முழுவதும் வேலை இருக்கும். முதலில் தலைப்பு படத்தை எடுப்போம். பிறகு இணையதளத்திற்குத் தேவையான மற்ற படங்களை எடுப்போம். வா அவா வேலையைப் பார்ப்போம், என்னை ஏன் அப்படிப் பார்த்துக்கொண்டு இருக்கிறாய் முட்டாள் பெண்ணே. ம்ம்.. சீக்கிரம்.

அவா வேகமாக அந்த மேசையை நெருங்கி, அதன் மேல் தனது கருவிகளை எடுத்து வைக்க ஆரம்பித்தாள்.

அந்த ராங்கிக்காரியை விட்டுத்தள்ளு. அவள் இன்றைக்கு ஒரு மாதிரி தான் இருக்கிறாள், என்று ஜனா அவள் தோளில் தட்டி ஆறுதல் சொன்னாள்.

அவள் என்று நல்ல மூடில் இருந்தாள்? என்று அவா பதில் கேள்வி கேட்டாள்.

இன்றைக்கு மிகவும் அலட்டிக்கொள்கிறாள், எல்லாம் இந்த அட்டைப்படப் படப்பிடிப்பிற்காகத் தான்.

நாம் இதற்கு முன் பலமுறை அட்டைப்படத்திற்காகப் படம் எடுத்திருக்கிறோம், இன்றைக்கு என்ன வந்தது?

நான் புகைப்படம் எடுப்பவள் தான், திருடி அல்ல.

இன்றைக்கு நாம் படம் பிடிக்கப்போவது முன்னணி மாடல் அழகி ஜீனி கார்டெல் தானே?

அது சும்மா ஒரு விளம்பரத்திற்காகவும் மற்ற நிறுவன மேனேஜர்கள் வயிறு எரிவதற்காகவும் தான், இன்று இங்கே வரப்போகும் மாடல் ஆக்ஸல் பர்ன்ஸ் தான் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

நம் புது முதலாளியா?

அவரேதான்.

அவர் இந்த இதழ் நிறுவனத்தை வாங்கியதிலிருந்து அதைப்பற்றி ஒன்றுமே வெளியே சொல்லவில்லை. ஏற்கனவே ஒரு இதழ் பிரசுரிக்கப்பட்டுவிட்டது, ஆனாலும் அவர் இதை வாங்கியது அல்லது அவரைப்பற்றி ஒன்றுமே அதில் குறிப்பிடப்படவில்லை என்றாள் அவா.

ஆம், இப்போது அவர் அட்டைப்பட நாயகனாக இருக்க ஒப்புக்கொண்டார் மற்றும் இந்த இதழ் ஒரு சிறப்பு இதழாக இருக்கப் போகிறது.

என்ன ஒரு முரண்பாடு, ஆனாலும் இந்த சூனியக்காரி ஏன் எல்லோரையும் இப்படிப் படுத்துகிறாள் என்று நமக்கு மட்டுமாவது தெரிகிறதே, அவள் இன்றைக்கு ரொம்ப தான் ஆடுகிறாள்.

ஆம், இன்று நமது முதலாளி இங்கு வரப்போகிறார். நாம் அவரை படம் பிடிக்கப்போகிறோம். எல்லாமே கச்சிதமாக இருக்க வேண்டும். சரியாகச் சொன்னாய் லியான்.

அப்படித்தான் அன்பே, நான் எப்போதுமே உனது சிறந்த உதவியாளர்.

ஆம் நீ எப்போதுமே சிறந்தவள் தான், நீ மட்டுமே சிறந்தவள் என்று சிரித்துக்கொண்டே ஜனா சொன்னாள்.

நீ அவரை பார்த்திருக்கிறாயா? அவர் மிகவும் கவர்ச்சிகரமானவர் என்று நான் கேள்விப்பட்டேன் என்றாள் அவா.

நான் அவரை பார்த்ததில்லை, ஆனால் மிகவும் கவர்ச்சிகரமானவர் என்று யாரோ சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன் என்றார் அந்த புகைப்படம் எடுக்கும் உதவியாளர்.

ஆம் அவரும் அவருடைய உதவியாளரும் பாவங்கள் என்று சிரித்துக்கொண்டே சொன்னாள் லியான். அசிங்கம் அவர்கள் இருவரும் ஒரு மாதிரி தான் இருக்கிறார்கள்.

உனக்கு எப்படித் தெரியும், நீ ஆக்ஸல் அவர்களைப் பார்த்திருக்கிறாயா? என்று கேட்டாள் அவா.

அன்று ஒதுங்கும் அறையைக் கடந்து செல்லும்போது ஓரக்கண்ணால் பார்த்தேன். முதலில் அவரது உதவியாளரின் அழகான பின்புறத்தைத் தான் பார்த்தேன், பிறகு தான் அங்கே ஆக்ஸல் இருப்பதைக் கவனித்தேன்.

நீ நேரத்தை வீணடிக்காதே, சரியா? என்று ஜனா சிரித்துக்கொண்டே சொன்னாள், ஆனால் அவளது கண்கள் பாஸ் மற்றும் உதவியாளர் இருவரும் வருகிறார்களா என்ற பார்த்துக்கொண்டிருந்தது.

அன்பே, நான் ஒன்றும் சாமியார் இல்லை.

உங்களுக்கு வேலைப் பார்க்கச் சம்பளம் தருகிறார்களா அல்லது இங்கு வந்து அரட்டை அடிக்க

சம்பளம் தருகிறார்களா என்ற அந்த ஹாலின் மறுபக்கத்தில் இருந்து கென்யா சத்தம் போட்டாள்.

விரைவாக ஆட்கள் அங்கு வர ஆரம்பித்தார்கள். ஃபேஷன் நிபுணர்கள் வந்தார்கள், பிறகு மெல்லிய தேக மாடல் அழகிகள், பளபளப்பான கேசம், எந்தவிதமான ஆடையும் கச்சிதமாக பொருந்தக்கூடிய ஊசி போன்ற உடலில் வந்தார்கள். அவா, அவர்களைப் பார்த்தாள், தான் அவர்கள் ரகமில்லை என்று அவள் உணர்ந்தாள். அவர்களின் உடல் அளவுகள் அவளை கவலைப்படவைக்கவில்லை. அதே சமயம் அந்த மாடல் அழகிகளும் இவளது சற்றே பருமனான உடல் அளவை பற்றிக் கவலைப்படவில்லை. அன்றைய நிகழ்ச்சி முழுவதும், அந்த அழகிகள் அவாவை மரியாதையுடன் நடத்தினார்கள்.

அவளது உடல் பருமனை நேரடியாக அல்லது மறைமுகமாக அவரது பாஸ் மற்றும் அந்த இதழ் இயக்குநர்கள் சிலர் மட்டுமே அவ்வப்போது கேலி செய்தார்கள். அவள், தனது வேலையைச் செம்மையாகச் செய்தாள் மேலும் அங்கிருந்த ஒரு சிலருக்கு அவள் செய்த மேக் அப் வேலைகளைப் பற்றி தெரிந்திருந்தது. நிச்சயமாக, அவா அந்த மாடல் அழகிகளின் “அன்பிற்குப் பாத்திரமானாள்”, பிறகு ஏன் அவளைப்பற்றி அந்த இதழ் இயக்குநர்கள் கவலைப்பட போகிறார்கள்?

அன்றைய பகல் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தது, எல்லாமே தடையில்லாமல் நடந்தது. உணவு இடைவேளை நேரத்தில் செயல்பாட்டு இயக்குநர் அவாவை அழைத்தார்.

நீ கொஞ்சம் இங்கேயே இருக்க வேண்டும், கார்டியனின் உடைகள் இப்போது வந்துவிடும், அவற்றைக் கொஞ்சம் அந்த ரேக்கில் மாட்டி விட வேண்டும் என்றார்.

தான் ஒன்றும் ஃபேஷன் உதவியாளர் அல்ல, தான் ஒரு மேக் அப் கலைஞர் என்று அவரிடம் சொல்ல நினைத்தாள். மேலும் கடந்த ஆறு மணி நேரமாக நின்றுகொண்டே வேலை செய்ததையும், பசி வயிற்றைக் கிள்ளுவதையும் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள், ஆனால் அதை எல்லாம் சொல்லாமல்,

சரி. அதற்குப் பின் நான் உணவு அருந்தலாமா என்று கேட்டாள்?

ஏன் நீ சாப்பிட ஏதும் கொண்டு வரவில்லையா? இங்கிருந்து எல்லோரும் வெளியே போகும்வரை நீ நகர முடியாது என்று நினைக்கிறேன். அப்படி நகர்ந்தால், நூறு டாலர்களுக்கு மேல் மதிப்புமிக்க இந்த உடைகளைத் திருடர்களின் பார்வைக்கு விட்டுச் செல்ல விரும்புகிறாயா?

ஆனால்...

என்ன ஆனால்?

ஒன்றுமில்லை, திருமதி ஹிக்ஸ்.

சரி இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு உன்னைச் சந்திக்கிறேன்.

மேற்கத்திய சூனியக்காரி (அவா கென்யா ஹிக்ஸ் அவர்களை அப்படி தான் இரகசியமாக அழைப்பாள்) அங்கிருந்து நகர்ந்ததும், அவா அங்கிருக்கும் வாடிக்கையாளர்களை நன்கு ஆராய்ந்து, யாரிடமாவது

பறக்கும் காலணிகள் இருந்தால், அதை எடுத்துக்கொண்டு, கற்பனை கதைகளில் வருவதைப்போல, எங்காவது தூரமாகப் போய்விடலாமா என்று நினைத்தாள். தனது ஃபோனில் உணவு டெலிவரி ஆப் -ஐத் திறத்து உணவை ஆர்டர் செய்தாள் அவா.

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: http://www.ebooks2go.com**